# அருள்மிகு கழுகாசலமூர்த்தி திருத்தலம்

முனைவர் பீ.பெரியசாமி,

*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா, https://orcid.org/0000-0002-7395-9699*

***Dr. B. Periyaswamy**, Assistant Professor, Department of Tamil, Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India, https://orcid.org/0000-0002-7395-9699*

**Abstract**

*The Kalgakasalamurthy temple is arranged in anKudaivara temple style. It was discovered by the Pandya king Athimadura Pandyan. Sampathi, an eagle sage, got rid of his sin after coming to this place and worshiping Lord Muruga. Realizing the greatness of this place, many poets have sung songs about it. One of the special features of Lord Muruga in this Talat is that he is the giver of Raja Yoga from the western face.There is a mountain as a tower in this temple. Also, the peacock here is situated on the left side of Murugan. . This temple tirtha is 'Kumara Theppam'. This tree is hilly.This temple is known by many names like Gajamugaparvatam, Kalukumalai, Kalukasalam, Tenpalani, Uvanagiri. Also, Thaipusam, Masi Magam, Panguni Uthiram, Agni Nakshatra period special worship, kandashashti are held in this temple.Various news of this place can be known through this article.*

**Keywords**

*Kalgakumalai, Kudaivara, Kalgakasalamurthy, Lord Muruga, Gandashashti*

**ஆய்வுச்சுருக்கம்**

கழுகாசலமூர்த்தி திருக்கோயில் குடைவரை முறையில் அமைந்ததாகும்.இது அதிமதுர பாண்டியன் எனும் பாண்டிய மன்னனால் கண்டெடுக்கப்பட்டது. இத்தலத்திற்கு வந்து முருகப்பெருமானை வழிபட்டு சம்பாதி எனும் கழுகு முனிவர் தமது பாவத்தைப் போக்கிக் கொண்டார். இத்தலத்தின் சிறப்பினை உணர்ந்த புலவர்கள் பலரும் இத்தலத்தின்மீது பாடல்களைப் பாடியுள்ளனர். இத்தலத்து முருகப்பெருமானின் சிறப்புகளில் ஒன்று மூலவர் மேற்கு முகமாக இருந்து இராஜயோகம் அளிப்பவராகத் திகழ்வது.இத்தலத்தில் கோபுரமாக மலையே திகழ்கிறது.மேலும், இங்குள்ளமயில் முருகனின் இடப்பக்கத்தே அமைந்திருக்கிறது. இவ்வாலய தீர்த்தம் ‘குமார தெப்பம்’ என்பதாகும்.இத்தல விருட்சம் மலைக்குன்றாகும்.இக்கோயில் கஜமுகபர்வதம், கழுகுமலை, கழுகாசலம், தென்பழனி, உவணகிரி எனப் பல பெயர்களால் வழங்கப்படுகிறது. மேலும், இத்தலத்தில் தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், அக்னி நட்சத்திர கால சிறப்பு வழிபாடு, கந்தசஷ்டி ஆகிய விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.இதுபோன்ற இத்தலத்தின் பல்வேறு செய்திகள் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**முக்கியச்சொற்கள்**

கழுகுமலை, குடைவரை, கழுகாசலமூர்த்தி, முருகப்பெருமான், கந்தசஷ்டி

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

**முன்னுரை**

கழுகாசலமூர்த்தி கோயில் ஒரு குடைவரை கோயிலாகும்.இக்கோயில் பாண்டியர் காலத்தியது என்றும் கி.பி.8 நூற்றாண்டினைச் சார்ந்தது என்றும் கூறுவர்.இக்கோயில் மூலவர் திருமணத்தடை நீக்கி அருள்புரிபவராகவும் குழந்தை பாக்கியம் அளிக்கக்கூடியவராகவும் திகழ்கிறார்.மூலவர் மேற்கு முகமாக இருந்து இராஜயோகம் அளிப்பவராகத் திகழ்கிறார்.வள்ளி தெய்வானையுடன் மயில்வாகனனாக நமக்கு அருள்பாளிக்கின்றார்.இத்தலத்தில் மலையே கோபுரமாகத் திகழ்கிறது.இவ்வாறாகப் பல்வேறு சிறப்புகளைப் பெற்றிருக்கக்கூடிய இத்தலத்தின் முருகப்பெருமானைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**அமைவிடம்**



கழுகுமலை முருகன் எனும் கழுகாசலமூர்த்திகோயில் தூத்துக்குடி மாவட்டத்தில்,கோவில்பட்டியிலிருந்து சங்கரன்கோவில் செல்லும் சாலையில் 22வது கிலோமீட்டரில் அமைந்துள்ளது.

**மூலவர்**

கழுகுமலையில் அமைந்த முருகனுக்கு அர்பணிக்கப்பட்ட குடைவரைக் கோயிலாகும்.இதனை, ***“பாண்டி நாட்டில் கோவில் பட்டியருகே உள்ளது கழுகுமலை; அங்கே தொன்மையாவன பல சிற்பக் கலைப் படைப்புகளைக் காணலாம்; அவற்றுள், கழுகுமலை முருகன் கோயிலில் காணலாகும் திருமுருகன் ஆறு திருக்கைகளுடன் காணும் திருவுருவமும் ஒன்று. தமிழகத்துப் பல கோயில்களிலும் முருகனின் ஊர்தியான மயில் வலப்பக்கத்தே இருக்கும்; ஆனால், இங்குள்ள மயில் முருகனின் இடப்பக்கத்தே அமைந்திருக்கிறது.”***(செ. வைத்தியலிங்கன், ப.289) என்று செ.வைத்தியலிங்கன் கூறியுள்ளார்.

**கோயிலமைப்பு**

தென்னத்தில் இருக்கும் கோயில்களிலேயே மிகவும் சிறந்தது முருகப்பெருமானின் கோயில்தான் என்பதை, ***“தென்னகத்திலே பல கோயில்கள் தொன்று தொட்டு விளங்கி வருகின்றன.அவற்றிலே முருகப்பெருமானுடைய கோயில்கள் சிறந்து திகழ்கின்றன.”***(இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி, பக்.15-16) என்கின்றனர்.

கழுகுமலை முருகன் கோயில் எதிர்புரமாக எட்டயாபுரம் சமஸ்தான மன்னரின் சிறு அரண்மனை அமைந்துள்ளது. முருகன் மேற்கு முகமாக வீற்றிருக்கும் மூன்று திருத்தலங்களில், இத்தலம் ராஜயோக தலம் என்று கச்சியப்பரால் போற்றப்பட்டுள்ளது. இக்கோயில் மூலவரான முருகப்பெருமான் வள்ளி மற்றும் தெய்வானையுடன் அருள்பாளிக்கிறார்.இஃது ஒரு சுற்றுலா தலமும், ஒரு காணிக்கைத் தலமும் ஆகும். இங்கு உள்ள மலையின் கற்பாறையைக் குடைந்து குகைக்குள் மூலவர் அமைக்கப்பட்டிருப்பதால் இது குடைவரைக் கோயிலாகும்.

இக்கோயிலுக்கு மலையே கோயில் விமானமாகத் திகழ்கிறது.குடவரைக் கோயிலானதால் கோயில் பிரகாரம் சுற்றிவர வேண்டுமானால் மலையைதான் சுற்றி வர வேண்டும்.அதற்கு மலைவலம் அல்லது கிரிவலம் என்று பெயர்.இவ்வாலய தீர்த்தம் ‘குமார தெப்பம்’ தல விருட்சம் – மலைக்குன்று

என்பதாகும்.எல்லோராவில் உள்ளகைலாசநாதர்குடவரைக்கோவிலைப்போன்றே, கழுகுமலையிலும்ஒரேபாறையில் உருவாக்கப்பட்டகுடவரைக்கோவில்உள்ளது.இதனைதமிழகத்தின்எல்லோராஎன்று அழைக்கின்றனர். இம்முருகப்பெருமான் கோயிலருகில் கழுகுமலை வேட்டுவன் கோயில் மற்றும் கழுகுமலை சமணர் படுகைகள் உள்ளது

**திருவிழா**

வைகாசி விசாகத்தன்று வசந்தமண்டபம் 10 நாள் திருவிழாவாகவும் கந்த சஷ்டி 13 நாள் திருவிழாவாகவும் தைப்பூசம் 10 நாள் திருவிழாவாகவும் பங்குனி உத்திரம் 13 நாள் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

**கந்தசஷ்டி பெருவிழா**

முருகப்பெருமானின் விழாக்களிலேயே மிகவும் புகழ் பெற்றது கந்தசஷ்டி பெருவிழா.இவ்விழா பொதுவாக எல்லா முருகப்பெருமான் கோயில்களிலும் நடைபெறும்.அதேபோல், “***இங்குஆண்டுதோறும்கொண்டாடப்படும்முக்கியத்திருவிழாக்களில்கந்தசஷ்டியும்ஒன்று.வழக்கமாகக்கந்தசஷ்டியின் 6-வதுநாளில்தான்அனைத்துமுருகன்கோயில்களிலும்சூரசம்ஹாரம்நடக்கும்.ஆனால், தமிழகத்திலேயேஇங்குமட்டும்தான் 5-வதுநாளானபஞ்சமிதிதியில்தாரகாசூரனைவதம்செய்யும்நிகழ்ச்சிநடைபெறுகிறது.”***(https://tamil.news18.com/)என்பது சிறப்பு.

**மாசி மகம் திருவிழா**

இத்திருத்தல மாசி மகம் திருவிழாவையொட்டி வருடந்தோறும் திருவனந்தல் பூஜை, விளா பூஜை மற்றும் காலசந்தி பூஜைகள், சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடைபெறுகிறது. அதனையடுத்து பக்தர்கள் பால்குடம் எடுத்து மலையை சுற்றி கிரிவலம் வருகின்றனர்.தொடர்ந்து முருகப்பெருமானுக்கு பாலாபிஷேகம் நடக்கிறது.அதை தொடர்ந்து பக்தர்கள் அலகு குத்தி மலையை சுற்றி கிரிவலம் வந்து நேர்த்திக்கடன் செலுத்துவர்.மாலையில் மயில் வாகனத்தில் சுவாமி வள்ளி-தெய்வானையுடன் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருளாசிவழங்குவார்.

**தைப்பூசதிருவிழா**

தைப்பூசதிருவிழாகொடியேற்றத்துடன்தொடங்கிதிருவனந்தல்பூஜை, விளாபூஜை, காலசாந்திபூஜைகள் ஆகியன நடைபெறும்.அடுத்துகொடிமரத்தில்கொடியேற்றம்நிகழ்ச்சியும், கொடிமரத்திற்குஅபிஷேகம்மற்றும்அலங்காரதீபாரதனைநிகழ்ச்சியும்நடைபெறும்.

**அக்னி நடசத்திரகால சிறப்பு வழிபாடு**



சித்திரை, வைகாசி மாதங்களில் அக்னி நட்சத்திர நாட்கள் ஒவ்வொரு ஆண்டும் வரும்.அவ்வாறான அக்னி நட்சத்திர நாட்களில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். அவ்வாறான, *“கோடைகாலத்தில்நிலவும்அதிகவெப்பம்காரணமாக, அக்னிநட்சத்திரகாலத்தில்கருவறையில்உள்ளமுருகப்பெருமானைகுளிர்விக்கும்பொருட்டுகருவறையை சுற்றிலும்தண்ணீர்கொண்டுநிரப்பப்படும்நிகழ்வுசுமார் 150 ஆண்டுகளுக்கும்மேலாகநடைபெற்றுவருகிறது. இவ்வருடம்நேற்றுஅக்னிநட்சத்திரம்தொடங்கியுள்ளநிலையில்கழுகுமலைதிருக்கோயில், ஸ்ரீகழுகாசலமூர்த்திஉறையும்கருவறைமுழுவதும்சுமார்இரண்டுஅடிஉயரத்துக்கு, திருக்கோயில்தீர்த்தம்குமாரதெப்பத்தில்இருந்துதண்ணீர்எடுத்துவரப்பட்டுநிரப்பப்பட்டது. கோடைகாலஅக்கினிநட்சத்திரவெயிலின்தாக்கத்தால்ஏற்படும்வெம்மையில்இருந்துமுருகப்பெருமானைகுளிர்விக்கும்பொருட்டுஇந்தநிகழ்வுஇங்குநடைபெற்றுவருவதாகக்கூறப்படுகிறது.*”(https://www.tirunelveli.today/)

**பங்குனி உத்திரம்**

*கழுகுமலை கோவிலில் வருடா வருடம் பங்குனி மாதத்தில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும்.இந்த திருவிழாவில் பாண்டிய வம்சத்தில் பிறந்த மன்னர்களுக்கு தனி மரியாதை அளிக்கப்படும்.பங்குனி மாத திருவிழா, மன்னர்கள் மட்டுமே இந்த தேரினை இழுத்து செல்வார்கள்.கெச்சிலாபுரம், கழுகுமலை, சங்கரலிங்கபுரம், ஆலங்குளத்தினை சேர்ந்தவர்கள் மட்டும் தேரினை தொடங்கி முடித்து வைப்பார்கள்.இந்த திருவிழாக்கள் இன்றும் அங்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது.இந்த கழுகுமலை கோவில் தேரினில் தேவேந்திரனின் சிற்பம், நான்கு குதிரைகள் இந்த தேரினில் இருக்கும்.தேவேந்திரன் தொட்டால்தான் இந்த தேர் ஓடும் என்பது வழக்கம்.இந்த கோவில் 25 நிலங்களை கொண்டுள்ளது. இந்த கோவில் நிர்வாகத்தை ஆதிகாலத்தில் இருந்து பாதுகாத்து வந்தவர்கள் பாண்டிய மன்னர்கள் ஆவர். அந்நியர்கள் படைக்கு பின்னர் அவர்களின் கைக்கு சென்றது இந்த கோவில் பொறுப்பு.இப்போது இந்த கோவில் தமிழ்நாடு அரசு மற்றும் தொல்லியல் துறை கட்டுப்பாட்டின் பொறுப்பில் உள்ளது கழுகுமலை கோவில்.*(https://www.pothunalam.com/)

**வேறுபெயர்கள்**

இக்கோயில் கஜமுகபர்வதம், கழுகுமலை, கழுகாசலம், தென்பழனி, உவணகிரி என்று பல பெயர்களால் வழங்கப்படும் இத்தலத்தை தென்பழனி என்று புராணங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

**தல வரலாறு**

பழங்காலத்தில் இவ்வாலயம் இருந்த இடம் காடாக இருந்தது.உவணகிரி என்று அழைக்கப்பட்ட இத்திருத்தலத்திற்கு தெற்கே, பழங்கோட்டை என்னும் ஊரில் அதிமதுர பாண்டியன் ஆட்சி புரிந்து வந்தான்.அவன் வேட்டையாடுவதற்காக இந்த காட்டுப்பகுதிக்கு வந்தான்.அப்போது ஓய்வெடுக்க வேங்கை

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

மரத்தடியில் அமர்ந்தான்.களைப்பில் உறங்கிவிட்டான். நண்பகலில் மணி அடித்து பூஜை செய்வது போன்று தோன்றவே கண் விழித்துப் பார்த்தான், அப்பொழுது பசு ஒன்று பாறையில் தானாக பாலை சுரந்து கொண்டு இருந்ததைக் கண்டான். பிறகு அந்தப் பாறையை அகற்றிப் பார்த்தபோது, குகை ஒன்றில் மயில் மீது அமர்ந்த கோலத்தில் முருகப்பெருமான் காட்சியளித்தனர்.இதனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த, இறைவனை வழிபட்டான். இது மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்படாமல், தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூலவர் என்றும், தேவர்கள் வந்து பூஜிக்கின்ற மூலவர் என்றும் உணர்ந்து மக்கள் வழிபட வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தான் என்கிறது இத்தல வரலாறு.

**புராணச் சிறப்பு**

இராவணன், சீதையை கவர்ந்து சென்றபோது.அதனை தடுக்க முயன்ற சடாயுவின் இறக்கையை வெட்டினான்.பின்னர் ஓடி வந்த இராமனும், லட்சுமணனும் ரத்தக் காயத்துடன் விழுந்து கிடந்த சடாயுவை கண்டனர்.அவர்களிடம் நடந்தவற்றைக் கூறிவிட்டு தன் உயிரை விட்டது சடாயு பறவை.இதனால், மிகவும் மனம் வருந்திய இராமபிரான், சடாயுவிற்கு செய்ய வேண்டிய சடங்குகளைத் தானே செய்தார். இதனைக் கேள்விப்பட்ட அவரது அண்ணன் சம்பாதி முனிவர், இராமபிரானிடம் வந்து சடாயுவின் இறப்பிற்கு மிகவும் வருந்தியதோடு, தன்னுடன் பிறந்தவனுக்கு செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளைக்கூட செய்ய இயலாத பாவியாகி விட்டேன் என்று புலம்பினார்.

அதைக்கேட்ட இராமபிரான், சம்பாதி முனிவரை தேற்றி, 'தென்னாட்டில் 300 அடி உயர மலையடிவாரத்தில், குகையில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமானை வணங்கி உன் பாவத்தைப் போக்கிக்கொள்' என்று அறிவுறுத்தி அனுப்பி வைத்தார். கழுகு முனிவராகிய சம்பாதி, இத்தலத்திற்கு வந்து தங்கியிருந்து, சுப்பிரமணியரை வணங்கி தனது பாவத்தை போக்கிக்கொண்டார்.இத்தலத்தில், கழுகு முனிவர் வசித்து வந்ததால் இம்மலை 'கழுகுமலை' என்ற பெயரைப் பெற்றது.கழுகுமலையில் அருள்பாலிப்பவர் என்பதால், இறைவனும் 'கழுகாசலமூர்த்தி' என்று அழைக்கப்படுகிறார்.

**பாடியோர்**

15-ம் நூற்றாண்டில் கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணத்தில், குன்றுதோராடிய குமரன் மேற்கு முகமாக உள்ள தலங்கள் மூன்று என்றும், அவற்றில் ராஜயோகமாக முருகன் வீற்றிருக்கும் தலம் கழுகுமலை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 18-ம் நூற்றாண்டில் சிதம்பர கவிராயரும் காளிப்புலவரும் 'கழுகுமலை பிள்ளைத்தமிழ்' என்ற பெயரில் நூல்களைப் படைத்துள்ளார்கள்.முத்துசாமி தீட்சிதரால் கீர்த்தனைகளும், பாம்பன் சுவாமிகளால் திருப்பாடல்களும் இத்திருத்தலத்தின் மீது பாடப்பட்டுள்ளன. 1989 ல் கோவில்பட்டி நீலமணி எழுதிய கவசத்திலிருந்து ஒரு பாடல்

**"வணங்கிடத் தலையும் தந்தாய்**
**வாழ்த்திட வாயும் தந்தாய்**
**இணங்கிட மனமும் தந்தாய்**
**இசைத்திட தமிழும் தந்தாய்**
**மணங்கமழ் மாலை கொஞ்சும்**
**மார்பனே ! காக்க காக்க**
**அணங்கொடு வந்தே காக்கும்**

**அழகனே! காக்க காக்க"**

(http://mathysblog.blogspot.com/2014/04/blog-post_30.html)

அருணகிரிநாதர் தமது திருப்புகழில் கழகுமலையில் வீற்றிருக்கும்முருகப்பெருமனைப்பற்றி மூன்று பாடல்கள் பாடியுள்ளார்.அதாவது,

**கதலி கமுகுசூழ் வயற்கு ளேயளி**

**யிசையை முரலமா வறத்தில் மீறிய**

**கழுகு மலைமகா நகர்க்குள் மேவிய ...... பெருமாளே.**

**(அருணகிரிநாதர், திருப்புகழ், பா.632)**

இதில் குழந்தைகளின்சொல்போலப்பேசுபவர்கள், பிறரதுபொருளைப்கவர்பவர்கள், தங்கள் அழகியமார்பகத்தைவிற்பவர்களாகிய விலைமாதுக்கள் மீதுஉள்ளபேராசை மிகவும்பொல்லாதது.அதனால் உண்டாகுமதுன்பத்தால்சிறுவனாகியநான்கலக்கமெய்தி, இளமையில்கொடியவர்களிடம்சிக்கி, என்தரித்திரநிலையைக்கூறிநிற்பதுஎன்னால்இனிஇயலாது.முழுமுதல்வனே, கட்டப்பட்டவில்லோடுஎதிர்த்தசூரனுடையஉடல்அழியுமாறு வேலைச்செலுத்தியவனே.கருமையானமேகத்தை போன்ற மேனியாலானதிருமாலின்மருகனே, வாழை, கமுகுஇவைகள்சூழ்ந்துள்ளவயலில்வண்டுகள்இசைகளைஎழுப்ப, பெரியதருமச்செயல்களில்உயர்ந்து நிற்கும்கழுகுமலைஎன்றநகரில்எழுந்தருளியிருக்கும்பெருமாளேஎன்று பாடுகிறார். மேலும்,

**கலைமதி யப்புத் தரித்த வேணிய**

**ருதவிய வெற்றித் திருக்கை வேலவ**

**கழுகும லைக்குட் சிறக்க மேவிய ...... பெருமாளே.**

**(அருணகிரிநாதர், திருப்புகழ், பா.633)**

விலை மாந்தர்கள் தங்கள் மார்பினை மூடி மூடித் திறப்பார்கள்.ஆடையைத் தளர உடுத்துவார்கள்.வாயிதழில் முத்தங்களைக் கொடுப்பார்கள்.பொலிவான மலர்ப்படுக்கையின் மேல் நிலை குலையத் தழுவுவார்கள்.ஆண்களின் மனவலிமையைக் கலங்கடிப்பார்கள்.மோக மயக்கம் பெரிதாகத் தந்து பொருட்களைப் பறிப்பார்கள்.இப்படியான விலை மகளிரின் நட்பு எனக்கு நல்லதாக இருக்குமோ? இராவணனுடைய தலைகள் பத்தையும் சிதறடித்து உடல்புண்பட்டுத் துடித்திடவே, ஒப்பற்ற வில்லை வளைத்துச் செலுத்திய அம்பை உடையவனாகிய இராமனின் மருகனே, சந்திரன், நீர் (கங்கை)இவைகளைச் சூடிய சடைமுடி கொண்ட சிவபெருமான் கொடுத்த வெற்றிவேலைக் கையில் ஏந்திய வேலவனே, கழுகுமலையில் சிறப்புடன் வீற்றிருக்கும் பெருமாளே எனக் கழுகுமலை முருகனைப் பாடியுள்ளார்.

**வேங்கை யடவி மறவர் ஏங்க வனிதை யுருக**

**வேங்கை வடிவு மருவுங் ...... குமரேசா**

**வேண்டு மடியர் புலவர் வேண்ட அரிய பொருளை**

**வேண்டு மளவி லுதவும் ...... பெருமாளே.**

**(அருணகிரிநாதர், திருப்புகழ், பா.634)**

எனும் பாடலில், கோங்கு மரத்தின் மொட்டும் மெலிவடையும்படியாக பருத்து, சந்தனக்கலவையையும் கொண்ட மலையை ஒத்த மார்பகங்கள் குழையும்படியாக காதல் மிகுந்து, தளிர்மலர்கள் விரித்த படுக்கையில்

குலவுகின்ற இனிமையானதும், நிறைந்ததுமான சேர்க்கையால் அமுதத்தை உண்டு, அழகிய விலைமாதர்களால் செலுத்திய பாணமாகிய கண்களை நுகர்ந்து, பகலும் இரவும் ஏற்படும் தூக்கம் மிகுந்து, குறையாத விருப்பமுடைய அடிமையாகிய நான், பெரிய பிறவிக் கடலை கடந்து, குற்றமில்லாத உனது திருவடிகளை அடையப் பெறுவேனோ? மலையை ஒத்த பெரிய கப்பல்களும், ஆண் சுறா மீன்களும், மகர மீன்களும் நிறைந்துள்ள கடலில்மாமரமாக முழ்கிச் சண்டை செய்த சூரனும் தளர்ச்சி அடைய, பிரமனும் அஞ்ச, அழகுவாய்ந்த கழுகு மலையில் மயில்மீதேறி உலவுகின்ற ஒப்பற்ற வேலவனே, புலிகள் நிறைந்த காட்டில் வேடுவர்கள் திகைக்க, வள்ளியின் மனம் உருக, வேங்கை மர உருவெடுத்த குமரேசா, தன்னை வேண்டி நிற்கும் அடியார்களும் புலவர்களும் வேண்டுதற்கு அருமையான பொருளை வேண்டியவாறு அளித்து காக்கும் பெருமாளே என்கிறார் அருணகிரிநாதர்.

அண்ணாமலைரெட்டியார் தமது கழுகுமலை காவடிச்சிந்தில்,

**“கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்**
**கோபுரத்துக்கப்பான் மேவி கண்கள்**
**கூசப்பிர காசத் தொளி மாசற்று விலாசத்தொடு**
**குலவும் புலி பலவும்”** (அண்ணாமலை ரெட்டியார், ப.5)

என்றும்,

**“மூசுவண்டு வாசமுண்டு காலின் மொண்டு தேனையுண்டு**
**மோகன முராரிராகம் பாடுமே மைய**
**லாகவே பேடையுடனே கூடுமே யலை**
**மோதுவாரிதி நீரை வாரிவிண் மீதுலாவிய சீதளாகர**
**முகில்பெருஞ் சிகரமுற்று மூடுமே கண்டு**
**மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே”** (அண்ணாமலை ரெட்டியார், ப.6)

என்றும் கழுகுமலையானின் சிறப்புகளைப் பாடியுள்ளார்.

**சிறப்புகள்**

முருகன் ஆலயங்கள் என்றாலே சிறப்புதான்.முருகனின் ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு.அந்த வகையில் இத்திருத்தலத்திற்கு ***“தாரகாசுரனை வதம் செய்த கார்த்திகேயனே இக்கோலத்துடன் காட்சி அளிக்கிறார் என்று கூறப்படுகிறது.முருகன் மேற்கு முகமாக இருக்கும் சந்நிதானத்தையுடைய மலை “சிவன் ரூபம்’ என்றும்; கிழக்கு முகமாக இருக்கும் மலை “சக்தி ரூபம்’ என்றும் வேதாகம நூல்களில் கூறப்பட்டுள்ளது.சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியாரை உலகறியச் செய்த அருமையும் இந்த கழுகாசல மூர்த்திக்கே சாரும்.பாட்டுக்கொரு பாரதி இங்கு வந்து பாடியதும், கழுகுமலைப் பிள்ளைத் தமிழ் பாடிய சிதம்பரக் கவிராயராலும், நாடக உலகில் புகழ்பெற்ற எம்.ஆர்.கோவிந்தசாமி அவர்களாலும், ஏனைய புலவர்களாலும் புகழ்பெற்றது கழுகுமலையாகும்.*** (https://www.vastushastram.com/) என்பது சிறப்பு.

**வேண்டுதல் பலன்கள்**

இத்திருத்தலத்து முருகனை வேண்டுவோருக்கு திருமணத் தடை நீங்குமென்பதும், குழந்தை பாக்கியம் கிட்டும் என்பதும் மக்களின் நம்பிக்கை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

**முடிவுரை**

கழுகு முனிவராகிய சம்பாதி எனும் முனிவர் இத்தலத்திற்கு வந்து முருகனின் அருள்பெற்று தமது பாவத்தை நீக்கிக் கொண்டதால் இத்தலம் கழுகுமலை என்ற அழைக்கப்படுகிறது.பழங்காலத்தில் இவ்வாலயம் இருந்த இடம் காடாக இருந்தது.உவணகிரி என்று அழைக்கப்பட்டது.அதிமதுர பாண்டியன் என்பவன் வாயிலாக இக்குகைக் கோயில் அறியப்பட்டது.கழுகுமலையானின் சிறப்புகளை உணர்ந்த அருணகிரிநாதர், கச்சியப்ப சிவாச்சாரியார்,சிதம்பர கவிராயர்,காளிப்புலவர், முத்துசாமி தீட்சிதர், பாம்பன் சுவாமிகள், கோவில்பட்டி நீலமணி, பாரதியார் போன்ற புலவர்கள் இத்தலத்து முருகனின்மீது பாடல்களைப் பாடியுள்ளனர். இவற்றின் வாயிலாக இத்தலத்து முருகப்பெருமானின் சிறப்புகளை நாம் அறிந்துக்கொள்ள முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

[1] அண்ணாமலை ரெட்டியார், கழுகுமலை காவடிச்சிந்து, கமர்சியல் அச்சியந்திரசாலை, கோலாலம்பூர், 1924.

[2] அருணகிரிநாதர், திருப்புகழ், ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2012.

[3] இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி, தமிழகக் கோயிற்கலைகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை வெளியீடு, 2014.

[4] செ. வைத்தியலிங்கன், சிற்பக்கலை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2016.

[5] http://mathysblog.blogspot.com/2014/04/blog-post_30.html

[6] https://tamil.news18.com/news/spiritual/the-arulmigu-kazhukasalamoor-temple-skanda-shasti-puja-happened-at-kalugumalai-murugan-temple-827135.html

[7] https://www.pothunalam.com/

[8] https://www.tirunelveli.today/ta/thaneer-nirampiya-karuvarayil-kaatchitharum-srikazhukaasalamurthi/

[9] https://www.vastushastram.com/

## References

[1] Annamalai Reddyar, Kalukumalai Kavadichindu, Commercial Achiyendirasalai, Kuala Lumpur, 1924.

[2] Arunagirinathar, Thirupugal, SriHindu Publications, Chennai, 2012.

[3] R. Nagasamy, M. Chandramurthy, Arts of Tamil NaduTemples, Tamil Nadu Government Department of Archaeology, 2014.

[4] S. Vaithiyalingan, Sculpture, Meiyappan Publishing House, Chidambaram, 2016.

[5] http://mathysblog.blogspot.com/2014/04/blog-post_30.html

[6] https://tamil.news18.com/news/spiritual/the-arulmigu-kazhukasalamoor-temple-skanda-shasti-puja-happened-at-kalugumalai-murugan-temple-827135.html

[7] https://www.pothunalam.com/

[8] https://www.tirunelveli.today/ta/thaneer-nirampiya-karuvarayil-kaatchitharum-srikazhukaasalamurthi/

[9] https://www.vastushastram.com/

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*